1990 மார்ச் 24]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சொன்ன பதில் இதற்கும் பொருந்தும்.

ஊத்துக்குளி கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*261—திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இரண்டு ஆண்டுகளுக்கு முன் அரசு அனுமதி வழங்கிய பெரியார் மாவட்டம் ஊத்துக்குளி கூட்டுக் குடிநீர்த் திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஊத்துக்குளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு கொடைமேடு அருகில் பவானி ஆற்றிலிருந்து நீர் பெறப்படும். இத்திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இம் மதிப்பீட்டிற்கு தொழில் நுட்ப அனுமதி, வாரியத்தால் வழங்கப்பட்டப் பின், பணிகள் தொடங்கப்படும். இத்திட்டம் 1993 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திற்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்தினுடைய மதிப்பீடு தொகை எவ்வளவு? இந்த திட்டத்தால் எத்தனை கிராமங்கள் பயன் பெறுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்தினுடைய மதிப்பீடு 1.08 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக 131 கிராமங்கள் பயன் அடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை விரைவுபடுத்துவதற்காக 1–9–1989 ஆம் தேதி செயற்பொறியாளர் அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டது. அந்த செயற்பொறியாளர் அலுவலகம் 9–9–1989-ல் ஏனோ அங்கே இருந்து மாற்றப்பட்டு விட்டது. ஆகவே அந்த செயற்பொறியாளர் அலுவலகத்தினை

அங்கே உருவாக்க குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்தத் திட்டத்தை விரைவுப்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மணப்பாறை நகருக்குக் குடிநீர்.

*626—திரு பாப்பா சுந்தரம்:
திரு. எஸ். டி. உகம்சந்த்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குளித்தலை தொகுதி, மணப்பாறை நகருக்கு காவிரியில் இருந்து குடிநீர் கொடுக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மணப்பாறை நகராட்சி மற்றும் 59 வழியோரக் கிராமங்களுக்கு தொம்பேச்சியார் ஆற்றினை ஆதாரமாகக் கொண்ட ஒரு குடிநீர் திட்டம் செயல்படுத்த ரூ. 548.52 லட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தீட்டப்பட்டது திருத்தி அமைக்கப்பட்ட உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு குடிநீர் மற்றும் துப்புறவுத் திட்டத்தில் இத்திட்டத்தினை சேர்த்து மத்திய அரசு மற்றும் உலக வங்கியின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது ஒப்புதல் கிடைக்கப் பெற்றவுடன் இத்திட்டத்தினை அமுலாக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு உலக வங்கியிடமிருந்து கடனாக பெறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். உலக வங்கி அதற்கு அனுமதி அளித்துள்ளதா? எத்தனை ஆண்டு காலத்திற்குள்ளாக இதை முடிப்பதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இருக்கின்றன என்ற விவரத்தை தெரிவிக்க